செ.வெ.எண் :651 நாள்: 05.10.2021

# மழைநீர் சேகரிப்பு குறித்த தொழில்நுட்ப ஆலோசனைகள் பெற 93846 55560 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம்- மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப. அவர்கள் தகவல்.

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அலுவலக வளாகத்தில், மழைநீர் சேகரிப்பு குறித்த விழிப்புணர்வு பிரச்சார வாகனத்தை மாண்புமிகு அரசு தலைமை கொறடா திரு.கோவி.செழியன் அவர்கள், மாண்புமிகு மயிலாடுதுறை பாராளுமன்ற உறுப்பினர் திரு.செ.ராமலிங்கம் அவர்கள், மற்றும் கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் திரு.க.அன்பழகன் அவர்கள் ஆகியோர் முன்னிலையில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப. அவர்கள் இன்று (05.10.2021) கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பிரசார வாகனத்தை கொடியசைத்து துவக்கி வைத்து, விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை பொதுமக்களுக்கு வினியோகித்து கூறியதாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பல்வேறு நலத் திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் மழைநீர் சேகரிப்பு குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் அதிநவீன மின்னணு எல்.இ.டி வீடியோ வாகனம் மூலம் விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டு இன்று அந்தப் பிரச்சார வாகனம் கொடியசைத்து துவக்கி வைக்கப்பட்டது. இந்த பிரச்சார வாகனம் இன்று முதல் 5 நாட்களுக்கு மாவட்டம் முழுவதும் சென்று விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவுள்ளது. மேலும் இப்பிரச்சார வாகனம் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை பராமரிக்கும் முறைகள் மூலம் கூரை மேல் விழும் மழை நீரை சேகரித்தல் குறித்தும், குழாய் கிணறு மூலம் மழைநீர் சேகரித்தல் குறித்தும், திறந்தவெளி கிணறு மூலம் மழைநீர் சேகரித்தல் குறித்தும் கசிவுநீர் குழிகள் மற்றும் துளையுடன் கூடிய கசிவு நீர் குழிகள் முறை மூலம் மழைநீர் சேகரித்தல் குறித்தும் விளக்கமாக வீடியோ படக்காட்சி மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட உள்ளது. மேலும் மழைநீர் சேகரிப்பு குறித்த தொழில்நுட்ப ஆலோசனைகள் பெற 93846 55560 என்ற எண்ணை தொடர்பு கொண்டு பயனடையலாம். எனவே நமது மாவட்டத்தைச் சேர்ந்த பொதுமக்கள் இதனை முறையாக பயன்படுத்திக் கொண்டு மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை உருவாக்கி, பராமரித்து பருவமழையின் முழு பயனை பெற வேண்டுமென்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

பின்னர் அரசு தலைமை கொறடா அவர்கள், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மற்றும் கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ஆகியோர் கும்பகோணம் அரசு தலைமை மருத்துவமனையில் லயன்ஸ் சங்கங்கள் சார்பில் ரூ.23 லட்சம் மதிப்பிலான புதிய ஆக்சிஜன் கொள்கலனை திறந்து வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தை சேர்ந்த நிர்வாக பொறியாளர் திரு.லோகநாதன், உதவி பொறியாளர்கள் திரு. ராஜா பரத், செல்வி.தமிழரசி, நிலத்தடி நீர் ஆய்வாளர் திரு.அருளானந்தம் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்திவெளியீடு : செய்தி -மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.**